# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 20 செவ்வாய்க்கிழமை (05.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 280


## குண்டுப்புரளியால் விமானசேவை பாதிப்பு

கொழும்பு,செப்.5

குடாநாட்டில் தங்கியிருந்த ஐ.நா. சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களில் ஒரு தொகுதியினரை தென்பகுதிக்கு அழைத்து வருவதற்கென நேற்று விசேட விமான சேவை நடத்தப்பட்டது.

மேற்படி சேவைக்கென ஏற்பாடு செய்

(06ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டியிலிருந்து ஏழு பேரின் சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம்,செப்.5

அல்லைப்பிட்டிப் பகுதியில் ஏழு பேரின் சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்து ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.த.விக்னராஜா, சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பாலசுப்பிரமணியம், யாழ்.பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா ஆகியோர் நேற்றுப் பிற்பகல் அல்லைப் பிட்டிக்குச் சென்றனர்.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரம், கறுப்பாய்ச்சி அம்மன் கோயிலுக்கு சமீபமாக உள்ள வீடு ஒன்றில் இருந்து நான்கு சடலங்களும்-

(06ஆம் பக்கம் பார்க்க)

# புலிப் பயங்கரவாதத்துக்கு எதிரான துணிச்சலை அரசு நிரூபித்துவிட்டது

## சு.க. வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி பெருமிதம்
## சம்பூர் அரசுப் படைகள் வசம் என்றும் அவர் அறிவிப்பு

கொழும்பு,செப்டெம்பர்5

"வடக்கு - கிழக்குப் பயங்கரவாதத்துக்கு அரசு ஒருபோதும் தலை சாய்க்காது. அதற்கு முகம் கொடுக்கக்கூடிய துணிச்சல் அரசுக்கு இருப்பதை நிரூபித்து விட்டோம்."

- இவ்வாறு நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனக் கூட்டத்தில் பெருமிதத்துடன் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மாநாட்டில் சுமார் 30 நிமிட நேரம் தலைமை உரை நிகழ்த்திய ஜனாதிபதி, இராணுவத் தளபதியையும், படைகளையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினார். சம்பூர்ப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றி விட்டது என்ற செய்தியையும் - பலத்த ஆரவார கரகோஷங்களுக்கு மத்தியில் - அங்கு அறிவித்தார் ஜனாதிபதி.

லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத்தின் தளபதியாக நியமிக்கத் தாம் எடுத்த தீர்மானத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் பெறுபேறாகப் போர்முனையில் அவரது சாதனைகளை மறைமுகமாகக் குறிப்பிட்டுக் கூறினார்.

அதேவேளை, சமாதான முயற்சிகள் மற்றும் அது தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய நகர்வுகள் என்பன பற்றி ஜனாதிபதி தனது நீண்ட உரையில் எதுவுமே தெரிவிக்கவில்லை.

(06ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை நேற்று மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு,செப்.5

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலையை நேற்று நள்ளிரவு முதல் மேலும் அதிகரித்துள்ளது.

நேற்றைய விலை அதிகரிப்பின்படி பெற்றோலின் விலை 5 ரூபாவால் உயர்த்தப்படுகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் விசேட அதிரடிப்படை இனி பாதுகாப்பு அமைச்சின் கீழ்!

கொழும்பு,செப்.5

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இருந்த விசேட அதிரடிப்படைப் பிரிவு முதலாம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படைப் பிரிவு 1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது முதல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்து வந்தது. பின்னர் 1996ஆம் ஆண்டு பொலிஸ்மா அதிபரின்

(06ஆம் பக்கம் பார்க்க)

# சம்பூரைக் கைப்பற்றிவிட்டோம் - இராணுவம்
# இன்னும் அங்கு சண்டை நடக்கிறது - புலிகள்

கொழும்பு, செப்.5

திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்று கூறப்படும் சம்பூர் பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்திருக்கின்றது. எனினும், சம்பூர் கிராமத்தை அரசுப்படைகள் இன்னமும் முழுமையாகக் கைப்பற்றிவிடவில்லை. இப்போதும் அங்கு மோதல் நடந்துவருகிறது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

அரசுப்படைகள் சம்பூரினுள் பிரவேசித்துவிட்டன என்பதை ஒப்புக்கொண்டுள்ள புலிகள் தரப்பினர், அங்கு ஒரு பகுதியில் தமது படை அணிகள் தந்திரோபாய ரீதியிலான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளனர்.

நீண்ட தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பின்னர் சம்பூரில் விடுதலைப் புலிகளின் காவலரண்களைப் படையினர் கைப்பற்றியிருக்கின்றனர் எனவும் - சம்பூர் நகர் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதென்றும் - அமைச்சர் ரம்புக்வெல 'பி.ரி.ஐ.' செய்தி நிறுவனத்திடம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, சம்பூரில் அரச படைகள் நிலைகொண்டு அங்கு புலிகளால் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை ஆரம்பித்திருக்கின்றன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசை கடுந்தொனியில் எச்சரிக்க இணைத் தலைமை நாடுகள் ஆயத்தம்

கொழும்பு,செப்.5

இலங்கையில் மீண்டுமொரு போர் வெடிக்கவுள்ள சூழ்நிலையில் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடர்பில் கடும் நிபந்தனைகளை முன்வைத்து கடுந்தொனியில் எச்சரிப்பதற்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் உத்தேசித்திருக்கின்றன என்று நம்பகரமாக அறியமுடிகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் எதிர்வரும் பதினொராம் திகதி பிரஸல்ஸில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தின்போது இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

இலங்கையில் தற்போது எழுந்துள்ள

(06ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு,செப்.5

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் லார்ஸ் ஜொஹான் சோல்பெர்க் பதவியேற்பதற்காக இன்று செவ்வாய்க்கிழமை இலங்கை வருகிறார்.

கண்காணிப்புக் குழுத்தலைவரான உல்ப் ஹென்றிக்ஸன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கையிலிருந்து சுவீடன் புறப்பட்டுச் செல்கிறார். சுவீடன் செல்லும் முன்னர் நோர்வே நாட்டுக்கு அவர் பயணம் மேற்கொள்கிறார்.

கடந்த முதலாம் திகதி பதவியேற்க வேண்டிய லார்ஸ் ஜொஹான் சோல்பெர்க் தவிர்க்கமுடியாத காரணங்களால் குறிப்பிட்ட நாளில் இலங்கைக்கு வரமுடியவில்லை என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஓமர்ஸன் தெரிவித்துள்ளார். (க)

## ஆறுநாள் பாண் உற்பத்திக்கான கோதுமை மாவே கையிருப்பில்!

### பேக்கறி உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

அடுத்துவரும் ஆறு நாள்களுக்கு பாண் உற்பத்திசெய்வதற்கான மாவே கையிருப்பில் இருக்கின்றது என யாழ்.மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 200 மெற்றிக்தொன் மா, பாண் உற்பத்திக்கென குடாநாட்டில் இயங்கும் 64 பேக்கறிகளுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டிருந்தது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக் கழக கணக்குகளை முடக்க அனுமதி கோரி மேல் நீதிமன்றில் மனு!

கொழும்பு,செப்.5

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கிவைப்பதற்கான அனுமதி கோரும் மனு ஒன்றை சட்டமா அதிபர் நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த மனு இன்று மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையின் பேரில் சட்டமா அதிபர் இந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் அனைத்தையும், இலங்கை மத்திய வங்கி திடீரென முடக்கி வைத்திருப்பது

(06ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினிச்சாவு ஏற்படுவதை தடுக்க ஏ-9 பாதையை விரைந்து திறக்குக!

## அரசிடமும், புலிகளிடமும் யாழ்.அரசசார்பற்ற இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.5

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பட்டினிச்சாவை தடுக்கும் நோக்குடன் மனிதாபிமான அடிப்படையில்-மோதல்களைத் தவிர்த்து - மக்களின் உணவு மற்றும் இயல்பு வாழ்வை ஏற்படுத்த வசதியாக ஏ-9 பாதையைத் திறக்க வேண்டும்.

இப்படி அரசையும் விடுதலைப் புலிகளையும் கோரியுள்ளது யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

இரு தரப்புக்கும் விடுத்துள்ள கோரிக்கையில் இணையம் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, உயிர், உடமைகளை இழந்து துன்பத்தில் வாழும் மக்கள், மீண்டும் போர் மேகங்கள் கருக்கட்டி எந்த நேரத்திலும் பாரிய யுத்தத்திற்குள் தாங்கள் அகப்பட நேரிடுமோ என்ற ஏக்கத்திலும், அச்சத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில், கடந்த 11 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டமும், ஏ-9 பாதை மூடப்பட்டு போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டு பொருள்கள் வருவது தடைப்பட்டுள்ளது.

அதேவேளை - வர்த்தக நிறுவனங்களில் உள்ள பொருள்களும் மற்றும் பால்மா வகைகளும், அத்தியாவசியப் பொருள்களும் கையிருப்பில் இல்லாத நிலையில்- வர்த்தக நிறுவனங்களில் மக்கள் கொள்வனவு செய்ய முடியாது அலையும் காட்சி மனதை உருக்குகின்றது.

கப்பல் மூலம் வந்த உணவுப் பொருள்களும் தேவைக்குப் போதிய வகையில் அமையவில்லை. கோதுமை மா, சீனி, பால்மா, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் கேள்விக் குறியாக உள்ளது.

### பொருள்களை ஏற்றி இறக்குவதில் காலதாமதம்

கப்பலில் பொருள்களை ஏற்றி இறக்கி பல நோ. கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வது கடினம். சீரற்ற காலநிலையும், கப்பல் போக்குவரத்தை பாதிக்கும் சூழ்நிலையை தோற்றியுள்ளது.

11 ஆம் திகதிக்கு முன் தினமும் 200 லொறிகளுக்கு மேல் தனியார் நிறுவனமும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்துவந்த நேரத்தில் கப்பல் மூலம் கொண்டு வரும் பொருள்கள் எவ்வகையில் மக்கள் தேவையினை நிறைவு செய்யும்...?.

கடந்த 11 ஆம் திகதியில் இருந்து ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக ஒட்டுமொத்தமாக 40 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதில் 13 ஆயிரம் மக்கள் நலன்புரிநிலையங்களில் வாழ்கின்றனர்.

ஆகவே மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு ஏதுவாக சம்பந்தப் பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம். இதுவே இணையத்தின் வேண்டுகோள்- என்று அதில் உள்ளது. (1)

## உள்ளூராட்சி அலுவலர் சேவைகளைச் செய்கின்றனர்

யாழ்ப்பாணம்,செப்.5

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அத்தியாவ்சிய சேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

"ஆணையாளர் அறிவுறுத்தலால் உள்ளூராட்சி அலுவலர்கள் அதிர்ச்சி" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து அனுப்பிய குறிப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

எந்த உள்ளூராட்சி அலுவலரும் குறித்த விடயம் சார்பாக முறைப்பாடு எதனையும் இதுவரை தமக்குச் செய்யவில்லை என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு: போக்குவரத்து சீரடையாத நிலையிலும் ஊரடங்குச் சட்டம் மாறுபட்ட நேரங்களில் தளர்த்தப்படுவதாலும் உள்ளூராட்சி அலுவலர்களால் தத்தமது அலுவலகங்களுக்குச் செல்வதில் உள்ள சிரமங்களை வெளிப்படுத்தும் வகையிலேயே மேற்படி செய்தி வெளியிடப்பட்டது.*

# துர்க்கை அம்மன் தேர்த்திருவிழாவிலிருந்து திரும்பிய குடும்பம் மீது சுன்னாகத்தில் சூடு!

## தந்தை மரணம்; தாய், சிறுமி படுகாயம்

வலி. வடக்கு,செப்.5

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற ரதோற்சவத்தில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தக் கொடூர சம்பவத்தில் 42 வயதான குடும்பஸ்தர் உயிரிழந்தார். அவரது மனைவியும், மகளான சிறுமியும் படுகாயமடைந்தனர்.

மயிலிட்டிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி, இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்து வந்த குடும்பம் ஒன்றுக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத நபர்கள் வீதியில் வைத்து இவர்கள் மீது சரமாரியாக சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

உயிரிழந்த குடும்பஸ்தர் முத்துத்தம்பி ஜெகநாதன் (வயது-42) என அடையாளம் காணப்பட்டார். இவரது மனைவி ஜெகநாதன் இராஜேஸ்வரி (வயது-39), மகளான ஜெகநாதன் ரேகா (வயது-7) ஆகிய இருவரும் படுகாயமடைந்து யாழ். பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

உயிரிழந்த குடும்பஸ்தர் இடம்பெயர்ந்தோரின் நலன் பேணும் அமைப்பு ஒன்றின் பொறுப்பான உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-1-15-78-68)

## சமயசந்நிதி

யாழ்பாணம், செப்.5

அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று செவ்வாய்கிழமை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

காலை 8 மணிக்கு திரவிய அபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு மஹா சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு பூஜை என்பன நடைபெறும். (202)

# நகருக்கு 3 கட்டங்களாக நேற்று முதல் மின்சாரம்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு நேற்று முதல் 3 வெவ்வேறுபட்ட நேரங்களில் மின் விநியோகம் வழங்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகம் இதனைத் தெரிவித்தது.

தினமும் காலை 6.30 மணிமுதல் காலை 8.30 மணிவரைக்கும் - காலை 9 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரைக்கும் - இரவு 7 மணிதொடக்கம் இரவு 11 மணி வரைக்கும்-

யாழ். நகரப் பகுதிக்கு மின் விநியோகம் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (202)

# வலிகாமம், தீவுப் பகுதிகளில் நேற்று 12 மணிநேரம் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ். மாவட்டத்தில் கடந்த 26 நாள்களாக அமுலில் இருந்து வரும் ஊரடங்குச் சட்டம் முதற் தடவையாக வலிகாமம் மற்றும் தீவுப்பகுதிகளில் நேற்று 12 மணிநேரம் தளர்த்தப்பட்டது. வடமராட்சியில் 9 1/2 மணி நேரமும், தென்மராட்சியில் 6 1/2 மணி நேரமும் தளர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி இரவு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச்சட்டம், இரு நாள்களின் பின்னர் வெவ்வேறுபட்ட நேரங்களில் தளர்த்தப்பட்டு வந்தது.

நேற்று முதற் தடவையாக, யாழ். நகர் உட்பட்ட வலிகாமம் மற்றும் தீவகப் பகுதிகளில் 12 மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

வலிகாமம் மற்றும் தீவகப் பகுதிகளில் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரையும்-

வடமராட்சியில் காலை 7 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரையும் -

தென்மராட்சியில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரையும் நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

நீண்ட நேர ஊரடங்கு தளர்வை அடுத்து யாழ். நகரப்பகுதியில் சனநடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

இதற்கிடையில் - குடாநாட்டுப் பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு கணிசமான அளவு அதிகரித்திருந்ததுடன், அரச அலுவலகங்களிலும் அலுவலர்களின் வரவும் உயர்ந்திருந்தது. ஊரடங்கு நீண்ட நேரம் தளர்த்தப்பட்டமை மாணவர், அரச அலுவலர் வரவு கணிசமான அளவு உயர்ந்திருந்தமைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. (111-68-202)

## நேற்றைய படுகொலைகள்

### யாழ்.நகரில்....

யாழ்ப்பாணம், செப்.5

யாழ். நகரப்பகுதியில் ஸ்ரான்லி வீதியில் கராஜ் நடத்திவரும் இளைஞர் ஒருவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் அவரது வேலைத்தளத்தில் வைத்து இனம்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி பாஸ்கரன்(வயது 31) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த மரணம் குறித்து யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1-15-78-68)

### உடுப்பிட்டியில்...

யாழ்ப்பாணம், செப்.5

உடுப்பிட்டி சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

உடுப்பிட்டி இலக்கணவத்தையைச் சேர்ந்த கந்தசாமி நகுலநாதன் (வயது 28) என்பவர் உயிரிழந்தார். வர்ணப் பூச்சுனரான இவர், உடுப்பிட்டிச் சந்தியிலுள்ள கடை ஒன்றில் 'பெயின்ற்' வாங்க வந்த சமயம், மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றவேளை, பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலை மாணவனான இராமச்சந்திரன் தனுஷனும் சூட்டுக்காயத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மாணவன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு இடம் மாற்றப்பட்டார்.

# சகல மாணவர்களும் ஒரே நேரத்தில் கல்விபயிலும் சூழல் உருவாக வேண்டும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.5

குடாநாட்டுப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பத்தில் கல்வி வசதி கிடைக்க ஆவண செய்யப்பட வேண்டும். - இவ்வாறு கோரியுள்ளது யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் வெவ்வேறு நேரங்களில் ஊரடங்கு தளர்த்தப்படுகின்றது. இதனால், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள் அனைவரும் சம சந்தர்ப்பத்தில் கல்விபெற முடியாத நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக, யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் - நகர்ப் பகுதிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் கணிசமானோர் குடாநாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வருபவர்கள். ஊரடங்கு வெவ்வேறு நேரங்களில் தளர்த்தப்படுவதானால் அனைத்து மாணவர்களும் ஒரே சமயத்தில் - ஒன்றாக இருந்து கல்விச் செயற்பாடுகளில் பங்குபெற முடியாத நிலை உருவாகியுள்ளது. குடாநாட்டிலுள்ள ஏனைய வலயப் பாடசாலை மாணவர்களும் இத்தகைய பிரச்சினைகளையே எதிர்கொள்கின்றனர்.

எனவே, குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் ஊரடங்கு தளர்த்தப்படுதல் வேண்டும் - அத்துடன், பாடசாலைச் சூழலில் - பாடசாலை நேரத்தில் சுற்றிவளைப்புகள் இடம்பெறக் கூடாது. சீரான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சகல பாடசாலைகளின் அதிபர்களும் இது விடயத்தில் கவனம் செலுத்தி சகல மாணவர்களும் ஒரே நேரத்தில் கல்வியைப் பெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதாவது அதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதும் அதிபர்களது முக்கியமான கடமை - என்று அதில் உள்ளது.

# வவுனியாவிலிருந்து யாழ்.வர ஆயிரத்து 500 பேர் பதிவு

வவுனியா, செப்.5

வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்குச் செல்வதற்கென சுமார் ஆயிரத்து 500 பேர் வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 500 பேர் அரச அதிகாரிகள் என்றும் ஏனையவர்கள் சாதாரண பொது மக்கள் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் தங்கியுள்ளவர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் போதியளவு இல்லாமையாலும், பயணத்தினைத் தொடரமுடியாமல் இருப்பதாலும் இவர்கள் நாள்தோறும் வவுனியா அரச செயலகத்துக்கு வந்து பல நெருக்கடிகளை கொடுத்து வருவதாகவும் அரச அதிபர் கூறினார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சர், மனித வள அமைச்சர் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்களுடன் தொடர்புகொண் [illegible] தெரிவிக்கப்பட்டது. (164)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆற்றுப்படுத்தல் சேவை

யாழ்ப்பாணம்,செப்.5

குடாநாட்டில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையால் இடம் பெயர்ந்த மக்களுக்கு யாழ்.சமூக செயற்பாட்டு மையம் ஆற்றுப்படுத்தல் சேவையை வழங்கி வருகிறது.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ். திருக்குடும்பகன்னியர்மட ஆங்கிலப்பாடசாலை, யாழ். புனித மரியன்னை பேராலயம், யாழ். புனித யாகப்பர் ஆலயம் ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களுக்கு முகாம் முகாமைத்துவத்தையும், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டையும் மேற்படி மையம் வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைவரை விடுதலை செய்க; அல்லது நீதிமன்றின் முன் நிறுத்துக

## சட்டமா அதிபருக்கு கஜேந்திரன் எம்.பி. அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,செப்.5

மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பயப் பீதியைப் போக்கி கல்வி நடவடிக்கைகளைச் சுமூகமாக முன்னெடுக்கவும்- மாணவர் பேரவைத் தலைவர் பகீரதனின் நலன் கருதி அவரை விடுதலை செய்ய அல்லது நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும்- யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சட்டமாஅதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சிவராஜா பகீரதனின் விடுதலை தொடர்பாக கஜேந்திரன்சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 18.08.2006 வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. அன்றைய தினம் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடனும் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காக பகீரதன் தனது அலுவலகஅறைக்குச் சென்றிருந்தார். பல்கலைக் கழகத்தினுள் அமைந்திருந்த மாணவர் ஒன்றிய அறையில் வைத்து இராணுவத்தினரால் பகீரதன் கைது செய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார். பகீரதனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படாது 60 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக அவரது எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனைய பல்கலைக் கழக மாணவர் மத்தியில் மரண பயத்தினை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் தமது கல்வியை தொடராமல் கல்வியை இடை நிறுத்தி விட்டு வீடுகளுக்கு செல்வதே பாதுகாப்பு எனக்கருதுகின்றனர். இந்நிலையில் பல்கலைக் கழகத்தினை மீள ஆரம்பிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக அனைத்து மாணவர்களினதும் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களிடைய ஏற்பட்டுள்ள பயப் பீதியை போக்கி கல்வி நடவடிக்கைகளை சுமூகமாக முன்னெடுக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் பகீரதனின் எதிர்கால நன்மை கருதியும் அவரை உடன் விடுதலை செய்ய அல்லது நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன். (ப)

## ஆவணிப் பூரணைதினவிழா

ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமம் ஏற்பாடு செய்துள்ள ஆவணிப் பூரணை விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க.பாடசாலையின் பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பஜனையைத் தொடர்ந்து ''சாது சங்கத்தினதும் சத்சங்கத்தினதும் மகிமைகள்'' என்ற பொருளில் ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமத்தின் செயலாளர், சி.சிவமோகன் ஆன் மீக உரை நிகழ்த்துவார்.

## இனந்தெரியாதோர் தாக்கி கால் முறிந்தது

வீதியில் நடந்து சென்ற ஒருவர் இனந் தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தாவடி - இயற்றாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேஸ்ரன் (வயது 43) என்பவரே காயமடைந்தவராவார். கால் முறிந்த இந்நபர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

# அரிசி, மீன்ரின் தரமற்றதானால் சுகாதார அதிகாரியிடம் முறையிடுக

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் மீன்ரின் என்பவை தரமற்றதாகக் காணப்பட்டால் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியிடம் முறையிடுமாறு சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் அரிசி பல இடங்களில் தரமற்றதாகக் காணப்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து யாழ்.பிரதி மாகாண சுகாதாரத் திணைக்களம் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

பொதுமக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பெறும் அரிசி மற்றும் மீன்ரின் என்பவை தரமற்றதாகக்காணப்பட்டால் பொதுச்சுகாதாரப் பரிசோதகரிடம் முறையிட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(202- ப)

## மணற்காடு மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்

கரவெட்டி,செப்.5

மணற்காடு மக்கள் தமது சொந்த வீடுகளுக்குச் சென்றுவர இராணுவத்தினர் அனுமதிக்க மறுப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மணற்காட்டுப் பகுதியிலுள்ள மக்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம் பெயர்ந்து குடத்தனைக்கு அண்மையில் தனியார் நிறுவனங் களால் அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகளில் தங்கியுள்ளனர்.

இவர்களில் சிலர் தமது சொந்தக் குடியிருப்புகளைப் புனரமைப்புச் செய்தும், சிலர் தமது காணிகளில் தொண்டு நிறுவனங் களின் உதவியுடன் புதிய வீடுகளையும் அமைத்தும் வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணங்களால் அனைத்து வேலைகளும் ஸ்தம்பித மடைந்துள்ளன.

மேலும் பாதுகாப்புப்படையினர் தமது பாதுகாப்புக் காரணங்களுக்காக கடற்றொழிலை கடந்த மாதம் எட்டாம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை முற்றாகத் தடை செய்துள்ளதுடன், மணற்காடு மக்களை அவர்களது சொந்த வீடுகளைச் சென்று பார்வையிடுவதையும் முற்றாகத் தடை செய்துள்ளதாகப் பாதிப்புற்ற மக்கள் தெரி வித்தனர்.

# சுகாதார சேவை நிறுவன அலுவலர்கள் கடமைக்குச் சமுகமளிப்பது குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.5

வவலிகாமம் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களும், வலிகாமம் பிரதேச பிரிவில் உள்ள வைத்திய நிறுவனத்தை நிரந்தர கடமைபுரியும் நிலையமாகக் கொண்டவர்களும் இன்று செவ்வாய்க்கிழமையிலிருந்து தத்தமது நிரந்தர பணி நிறுவனங்களில் பணியாற்ற வேண்டும் என்றும்-

தற்காலிகமாக பணியாற்றுபவர்களை சம்மந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப்பணிப்பாளர் வைத்திய காலநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை- வடமராட்சி, தென்மராட்சியை வதிவிடமாகவோ அல்லது நிரந்தர பணிநிறுவனமாகவோ கொண்ட பணியாளர்கள் தொடர்ந்து மறுஅறிவித்தல் வரை தற்பொழுது உள்ளவாறே கடமை புரியலாம் என்றும்-

மேற்படி அலுவலர்களின் பணிநிலைமை பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அரசு தொடர்பாக விவாதிப்பதற்கு ஆளுங்கட்சி - ஐ.தே.க. பிரதிநிதிகள் குழு

கொழும்பு, செப்.5

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பான விட யத்தை ஆராய்வதற்காகவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒன்றுபட்டுச் செயற்படுவது குறித்துக் கலந்துரையாடுவதற்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற் றின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அடங்கிய இரு வேறு குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

முன்னதாகத் தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து வினவி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுப் பியிருந்த கடிதத் திற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வார இறுதியில் பதில் கடிதமொன்றை அனுப் பியிருந்தார்.

ஐ.தே.க. தலைவரின் இந்தக் கடிதத்திற்கான பதில் கடிதம் இன்று ஜனாதிபதியால் அவருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான பேச்சுக்களை நடத்த முன்வருமாறு ஜனாதிபதி தனது கடிதத்தின் மூலம் ஐ.தே.க. தலைமையைக் கோருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் தேசிய அரசு அமைப்பது குறித்துப் பேச்சு நடத்துவதற்காக இரு கட்சிகளினதும் சிரேஷ்ட பிரதிநிதிகள் அடங்கிய இரு குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

(ஐ-05)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 • 10 • 1960 |  | 05 • 09 • 2004 |

அமரர்

### விஜயநாதன் விக்கினேஸ்வரராசா

(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

எங்கள் குடும்ப விளக்கு
அணைந்தாலும் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது
என்றும் பிரகாசிக்கும் அன்புத் தெய்வமே!

வீமன்காமம்,
தெல்லிப்பழை.

மனைவி, பிள்ளைகள்,
ஏழாலை.

## மரண அறிவித்தல்

### தம்பிராசா அந்தோனிப்பிள்ளை (செபரட்ணம்)

(முன்னாள் கிராமசபை உறுப்பினர் கொக்குவில் மேற்கு கொக்குவில்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட தம்பிராசா அந்தோனிப்பிள்ளை நேற்று (04.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - மேரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற றோசாமலர், சிமியோன் (பாபு), தேவராஜா, அக்கினேஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்சிஸ்அம்மா (லண்டன்), பிரான்சிஸ் (ஜேர்மனி), ஞானசோதி (ஜேர்மனி), ஞானராணி, அன்ரன்விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலதாஸ் (லண்டன்) றோஸ்மலர்(ஜேர்மனி), அலன்றோஸ் (ஜேர்மனி), மனோகரசீலன், தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் அறிவழகன், தாஸ், டயானா, டயானி, தர்சினி, டெனிஸ்ரலா, டினேஸ், பிரதீப், நிரோஜன், சுபரேகா, சுரேன், சுலக்ஷனா, சுஜீவன், டிலானி, அஸ்லிதா, அஜய் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (06.09.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆனையூர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
*தொ.பே.: 021 222 9580*

தகவல்:
அ.மனோகரசீலன்
(மருமகன்)

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் அனுரா கலந்துகொண்டார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நேற்றைய 55ஆவது சம்மேளனக் கூட்டத்தை கட்சியின் முன்னாள் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க புறக்கணித்து விட்டார். ஆனால், இக்கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டாரென பரவலாக எதிர்பார்க்கப் பட்ட கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான அனுராபண்டாரநாயக்க கடைசி நேரத்தில் தனது முடிவை மாற்றிக்கொண்டு கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரியவந்ததையடுத்தே அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தனது முடிவை மாற்றி கூட்டத்தில் கலந்து கொள்ளத் தீர்மானித்தாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இதேவேளை-நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாத காரணத்தை விளக்கி முன்னாள் தலைவி, கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய கூடத்தில் கலந்து கொண்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க முக்கிய [illegible] என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## மரணஅறிவித்தல்கள்

### சுந்தரமூர்த்தி பாஸ்கரன்

(மெக்கானிக் ராஜன்)



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 430, ஸ்ரான்லி வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி பாஸ்கரன் (ராஜன்) நேற்று (04.09.2006) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுந்தரமூர்த்தி - கமலாதேவி (மேரி ஜெசித்தா) தம்பதியரின் அன்பு மகனும், லதாதேவி, லதாரஞ்சினி, ரமேஸ் (பெயின்ரர் லான்ட் மாஸ்ரர்), விஜயபிரபு (கண்ணன் - டுபாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரவியநாதனின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அவரின் இல்லத்திலிருந்து இன்று (05.09.2006) செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*430, ஸ்ரான்லி வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

(59563)

தகவல்:
சு. ரமேஸ்

### சங்கரப்பிள்ளை ஆனந்தசிவகுமாரன்

யாழ்ப்பாணம், 210, நாவலர் வீதியைச் சேர்ந்த சங்கரப் பிள்ளை ஆனந்தசிவகுமாரன் 03.09.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை (பிரபல சட்டத்தரணி) - காலஞ்சென்ற சங்கரப் பிள்ளை சிவானந்தவல்லி அம்மா (யாழ்.நகர் விவாகப் பதிவாளர்) தம்பதியரின் மூத்த மகனும் ஸ்ரனாசியின் (லண்டன்) அன்புக் கணவரும் விக்ரோறியாவின் (லண்டன்) அன்புத் தந்தையும் ஜெயக்குமாரன் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏ.நாகேஸ்வரன்,*
*210,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(53560)

தகவல்:
ச.ஜெயக்குமாரன்
(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 27 - 07 - 1955



ஆண்டவன் அடியில் 23 - 07 - 2006

## அமரர் சோமசுந்தரம் திருஞானசம்பந்தன்

*(சின்னாலடி சம்பந்தன் கடை - உரிமையாளர்)*

*அன்பால் எமை அணைத்து அறிவால்*
*எங்களை உயர்த்தி*
*பண்பால் பாரினிலே பலர் போற்ற*
*வாழ்ந்திட்ட எங்கள் தெய்வமே!*
*வஞ்சகரின் துப்பாக்கிக்கு இரையானீரே அப்பா!*
*நாள்கள் பல சென்றாலும்*
*ஆறாதையா எங்கள் துயரம்!*
*பாரினிலே நாம் உள்ளவரை உங்கள்*
*நினைவுகள் நிலைத்திருக்கும்.*

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்

*சின்னாலடி,*
*காரைநகர்.*

(53513)

## பங்குத்தந்தை முயற்சியால் இளைஞர் விடுதலை

கரவெட்டிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கரவெட்டி பங்குத்தந்தை சிவபாதம் ஆனந்தகுமாரின் முயற்சியை அடுத்து விடுவிக்கப்பட்டுள்ளார். தவராசா அமல்ராஜ் (வயது 21) என்ற இளைஞரே விடுவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ப-79)

## ஊரடங்கு வேளையில் சங்கக்கடைகள் உடைக்கப்பட்டுத் திருட்டு

வலி.தென்மேற்கு,செப்.5

இரவு ஊரடங்குச் சட்ட அமுல் நேரத்தில் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஐந்து கிளைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் நவாலி வடக்கு, நவாலி தெற்கு ஆலங்குழாய் கிளைகள் மற்றும் உயரப்புலத்திலுள்ள விசேட மொத்தக் களஞ்சியம் ஆகியனவே உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - சங்கத்தின் இரண்டு லொறிகள் பாதுகாப்புப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் - இதனால் சங்கத்திற்கான உணவுப் பொருள்களை - நிவாரண பொருள்களை எடுத்து வருவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும்- அவர் மேலும் தெரிவித்தார். (ப-135)

# மரண அறிவித்தல்

## *திருமதி குணரட்ணம் சுசீலா*



நீர்வேலி மத்தி - நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்துவந்தவருமான திருமதி குணரட்ணம் சுசீலா 04-09-2006 அன்று அதிகாலை 3 மணியளவில் கனடாவில் காலமானார்.

அன்னார் நீர்வேலியைச் சேர்ந்த அப்புத்துரை- நேசமலர் தம்பதியரின் ஏகபுத்திரியும் கிருஷ்ணர் குணரத்தினத்தின் அன்பு மனைவியும் நிவேஜன், நிரோஜன், நிஷாந் ஆகியோரின் பாசமிகு அன்னையும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - மனோன்மணி தம்பதியரின் மருமகளும் சோதிலிங்கம் (ஜேர்மனி), பாஸ்கரன் (தொழில்துறை திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*குறிப்பு:- அன்னாரின் நீர்வேலி மத்தி இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.*

*தகவல்:*
**அ.பாஸ்கரன் (சகோதரன்),**
**நீர்வேலி மத்தி, நீர்வேலி.**

(53558)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
இன்று முதல் 10.00, 2.00 காட்சிகள்
**Superman**
சுப்பர்மான் (தமிழாக்கம்)

**Brown & Co.Ltd.**
எமது பிறவுண்ஸ் காட்சியறையின் தொ.பே.இலக்கம் தற்போது 2224040 என்ற இலக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
முகாமையாளர்,
Brown & Co.Ltd. Jaffna.
(53553)

# நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி



## அமரர் தர்மலிங்கம் பரராஜசிங்கம்

(உரிமையாளர், யாழ்ப்பாண வணிக நிலையம், யாழ்ப்பாண இரும்பகம் - யாழ்ப்பாணம், கதிரவன் இரும்பகம் - சாவகச்சேரி)

## திருமதி பரராஜசிங்கம் கிருஷ்ணாவதி

தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை

| | | |
|---|---|---|
| 09✱07✱1924 | அன்னை மடியில் | 08✱12✱1937 |
| 10✱11✱2004 | ஆண்டவன் மடியில் | 17✱08✱2005 |

*திதி: திரயோதசி*

### பெற்ற தெய்வங்களே!

மெத்தையில் நாமுறங்க
முள்ளில் தவமிருந்த - எம்மை
பெற்ற தெய்வங்களே!

உதிரத்தை உரமாக்கி
உயர்வாக நாம்வாழ
உதிர்ந்த செல்வங்களே!

அவையத்துள் முன்னின்று
அற்புதமாய் நாம் சிறக்க - வாழ்வை
அர்ப்பணித்த தியாகிகளே!

நற்குணமும் நற்பண்பும்
நல்லென செய்யும் மனத்தெளிவும்
திறனென எமக்களித்த தெய்வங்களே!

கொல்லும் துன்பம் வந்தபோதும்
நின்று வெல்லும் மனத்துணிவை
விதைத்து விளைந்த தீர்களே!

பகலும் இரவும்
எங்கள் பாதை முழுவதும் ,
மலர்களைச் சொரிந்த சோலைகளே!

இருந்ததெல்லாம் எமக்கிழந்தும்
வருத்தும் நோயில் வலிந்து விழுந்தும்
எங்கள் வாழ்வு கண்டு குளிர்ந்த நிலவுகளே!

உருவங்கள் அழிந்தபோதும்
உயிருக்குள், உதிரத்தில் உயர்வாக
கலந்து நிலைத்த உறவுகளே!

*27/7, இந்துமகளிர் ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
**தொ.பே.இல.:021 222 3205**

**- குடும்பத்தினர்**

## பெருந் திருவிழா

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ப-135)

## தபாலக ஊழியர் கையெழுத்திட வசதி

வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு வந்து அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திரும்பிச் செல்லமுடியாதுள்ள தபாலக ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் சகலரும் தாம் தற்போது வசிக்கும் பிரதேசத்தில் உள்ள தபாலகங்களில் கையெழுத்திடுமாறு பிரதி அஞ்சல் அதிபர் வீ.குமரகுரு கேட்டுள்ளார்.

மேற்படி ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கையெழுத்திடுவதற்கேற்ற சகல வசதிகளையும் செய்து கொடுக்குமாறு சகல தபாலகங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ப-1)

## தினம் நூறு நோயாளர்களுக்கு சிகிச்சை

நவாலி,செப்.5

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் தற்போது இருநூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தினமும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஏனைய வைத்தியசாலைகளுக்கு செல்ல முடியாதவர்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் சிகிச்சை பெறவருகின்றனர். (100)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 11 - 02 - 1928



விண்ணில் 06 - 08 - 2006

## அமரர் கந்தையா நடராஜா

*(ஓய்வுபெற்ற சிரேஷ்ட இலிகிதர்)*

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து உதவிபுரிந்தவர்களுக்கும் தொலைபேசி மற்றும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு அவரின் இல்லத்தில் இன்று (05.09.2006) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த அஞ்சலி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(53552)

என்றும் உங்களின் நினைவில் வாடும்:
குடும்பத்தினர்.

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

### பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

1. பொதுமுகாமையாளர்
சம்பளத்திட்டம் - 101/08 - 31/99
5250 - 7750
120 X 10 - 130 X 10

**தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் முகாமை மட்டத்தில் உள்ளவர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 100 ஆவது சம்பளத் திட்டத்தில் ஆறு வருடத்திற்குக் குறையாத முகாமை மட்டத்தில் அனுபவம்

அல்லது

ஆ. பட்டதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் நான்கு வருடகால அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தர பத்திரம் அல்லது க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

02.வயதெல்லை: 21-45 வரை

தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பும் பட்சத்தில் அவற்றை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளியிடப்படுமிடத்து நியமனத்தை இல்லாது ஒழிப்பதற்கும் வழிவகுக்கும். காரைநகரிற்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவு திகதி: 18 09-2006

தலைவர், காரைநகர் ப.நோ.கூ.சங்கம், காரைநகர் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.

தலைவர்,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம், காரைநகர்.

(சி/53559)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# சீருடை அராஜகங்களைக் கட்டுப்படுத்த மனம் இருந்தால்தான் இடமுண்டு

மூதூரில் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து கண்காணிப்புக் குழுவின் தலைவர் விடுத்த அறிக்கை அரசுத் தலைமையைத் தட்டி எழுப்பி சற்றேனும் சிந்திக்க வைத்திருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

இந்தப் படுகொலைகள் குறித்து சர்வதேச மட்டத்தில் எழுந்த அதிர்ச்சி அலைகள் தமக்குப் பெரும் பாதகமாக அமையப் போகின்றன என்பதைத் தாமதமாகவேனும் உணர்ந்து கொண்ட அரசுத் தலைமை, இப்போது நிலைமையைச் சீர்செய்ய விழுந்தடித்துக் கொண்டு முனைகின்றது.

நாட்டில் இடம்பெற்ற நீதி முறைக்குப் புறம்பான படுகொலைகள், ஆட் கடத்தல்கள், காணாமற் போதல் போன்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச சுயாதீன ஆணைக் குழுவை அரசு அழைக்கும் என்று நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச ஊடகம் ஒன்று ஊடாகத் தற்போது வெளியிட்டிருக்கும் அறிவிப்பை இந்தப் பின்னணியிலேயே நாம் நோக்க வேண்டும்.

திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர் படுகொலைகளில் தொடங்கி, ஊடகவியலாளர் சுகிர்தராஜன், திருகோணமலை மக்கள் பேரவைத் தலைவர் வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் ஆகியோரின் படுகொலைகள், மந்துவிலில் ஆலயத் திருவிழா ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த எட்டுத் தமிழ் இளைஞர்கள் மர்ம மறைவு, அல்லைப்பிட்டிப் படுகொலைகள், வங்காலைக் கோரக் கொலைகள், யாழ். குடாநாட்டில் தினசரி மர்மக் குழுக்களினால் நடத்தப்படும் படுகொலை அட்டகாசம், 'உதயன்' அலுவலகம் மற்றும் களஞ்சியம் மீதான தாக்குதல்கள் என்று நீண்டு செல்லும் பெரும் பட்டியலில் இலங்கை அரசுப் படைகளினதும், புலனாய்வுக் குழுக்களினதும் மனித உரிமைகள் தொடர்பான நற்சான்றிதழ் 'கொடிகட்டிப் பறக்கிறது'.

இந்தச் சம்பவங்கள், அராஜகங்கள் எல்லாம் அரங்கேறி மாதங்கள் கடந்து விட்டன. குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாக, கொடூரங்கள் நடந்து, தடயங்கள் அழிந்து, தப்புகள் தொலைந்து, எல்லாம் ஆறிய பின்னர் இனி சர்வதேச புலனாய்வாளர்கள், விசாரணையாளர்கள், ஆணையாளர்கள் என்று யாரை அழைத்தும் என்ன பயன் என்பதே பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் விசனத்துடன் எழுப்பப்படும் கேள்வியாகும்.

அண்மைக் காலத்தில் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் - இடம்பெற்ற இந்த அராஜகங்கள் குறித்து நீதி விசாரணைகள் - நீதியாக நடந்தன எனத் திருப்திப்படுத்தும் எந்த நம்பிக்கையும் இல்லை.

கொலைகாரர்கள், கொலைச் சூத்திரதாரிகள், குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படாமையும், சட்டத்தின் முன் அவர்கள் நிறுத்தப்படாமையும் ஒருபுறமிருக்க, இத்தகைய விடயங்கள் சர்வசாதாரணமாக நடக்க, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள அதிகாரவர்க்கம் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருப்பது குறித்து அரசுத் தலைமை என்ன செய்கின்றது என்பதே முக்கிய கேள்வியாகும்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தை எடுக்கலாம். திருகோணமலையில் கடந்த ஜனவரி 2 ஆம் திகதி அப்பாவித் தமிழ் மாணவர்கள் ஐவர் கொடூரமான முறையில் - தலைக்கு அருகே துப்பாக்கியை வைத்து - சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களை யார் கொலை செய்தார்கள் என்பது அரசுத் தலைமைக்குத் தெரியாது எனக் கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானதாகும். சட்டரீதியாகக் கொலையாளிகளை வளைத்துக் கம்பி எண்ண வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அதைத்தான் விடுங்கள். அந்தப் படுகொலைகளை மூடி மறைக்கும் விதத்தில் - ஆரம்பத்தில் இருந்தே கதைகளைத் திரித்த - அந்த மாணவர்கள் தாம் கையில் கொண்டு வந்த வெடிகுண்டு வெடித்தே உயிரிழந்தார்கள் என்று விடயத்தைத் திசை திருப்பிய - அதிகார வர்க்கத்துக்கு எதிராக அரசுத் தலைமை என்ன நடவடிக்கை எடுத்தது? குறைந்த பட்சம் ஓர் அதிகாரியையாவது தண்டனை இடமாற்றத்திற்கு உட்படுத்தியதா? ஓர் அதிகாரிக்காவது கண்டனக் கடிதம் மேலதிகாரிகளால் அனுப்பப்பட்டதா? எதுவுமில்லை. மிக மோசமான படுகொலைகளைப் புரிந்ததாகக் கருதப்படும் சீருடையினர் அவற்றைப் புரிந்த பின்னரும் 'தேசப்பாதுகாவலர்களாக' போற்றப்படும் அநீதி இங்கு அரங்கேறுவதால்தான், தமிழர்கள் தமக்கு நீதி வேண்டி சட்டத்தையும், நீதியையும் தாமே தமது கையில் எடுக்க வேண்டியவர்களானார்கள்.

சீருடைத் தரப்பால் தமிழர் விரோதப் போக்கில் அப்பாவிகளுக்கு எதிராகக் கொடூரங்கள், கொலைகள், அராஜகங்கள் புரியப்படும்போது அவை குறித்து கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டுக்குரிய சமிக்ஞை - வெளிப்பாடு - அரசுத் தலைமையால் வெளிப்படுத்தப்படுவதில்லை. மாறாக அத்தகைய சம்பவங்களை மூடி மறைக்கவும் அல்லது குற்றச் செயல்களை நியாயப்படுத்தவும் அல்லது குற்றச்சாட்டை எதிர்த்தரப்பு மீதுசுமத்தி தவறிழைத்தோரைப் பாதுகாக்கவும் முயல்வதன் மூலம், மனித உரிமைகளை மீறும் தனது படையினருக்கும், படை உயரதிகாரிகளுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் தவறான செய்தி ஒன்றை - நிலைப்பாடு ஒன்றை - கோடிகாட்டுகின்றது அரசு.

அரசுத் தலைமையின் இந்தப் போக்கே மேலும் மேலும் மனித உரிமை மீறல்களிலும், படுகொலை அராஜகங்களிலும் ஈடுபட சீருடையினரை ஊக்குவிக்கின்றன - தூண்டுகின்றன - என்பதும் கவனிக்கத்தக்க அம்சம்.

சட்டத்தைத் தூர வைத்து விட்டு, ஆயுத வலிமையோடு இருக்கும் படையினர், யுத்தப் பிரதேசத்திலே அந்த வலிமையின் பின்னணியில் மனித உரிமை மீறல் போக்கில் செயற்பட்டால் அதை அரசு பார்த்திருக்காது, பொறுத்துக் கொள்ளாது, கண்டிக்கும், தண்டிக்கும் - என்ற உறுதியான நிலைப்பாடு அரசுத் தலைமைக்கு வர வேண்டும். அந்த நிலைப்பாட்டை வார்த்தை ஜாலங்களில் மட்டுமல்லாது - சொல்லில் மட்டுமல்லாது - செயலிலும் வெளிப்படுத்திக் காட்ட அரசுத் தலைமை இதய சுத்தியோடு முன்வர வேண்டும். தவறிழைப் போரை தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கும் கடும்போக்கும், அதற்கான திடசித்தமும், மன உறுதியும் அரசுத் தலைமைக்கு இருந்தால் தான் இவ்விடயங்களில் ஓரளவுக்காவது நீதியை நிலைநாட்ட முடியும்.

ஆனால், தமிழர்களுக்கு எதிரான சீருடை அராஜகங்களின் விடயத்தில் இந்த நீதியான நிலைப்பாடு இல்லவே இல்லை என்பதுதானே கடந்த ஐந்து தசாப்தகால யதார்த்தம்! 'மஹிந்த சிந்தனை'யிலும் அதற்கு இடமில்லை என்பதும் இப்போது நிஜத்தில் நிரூபணமாகி வருகின்றது. அவ்வளவே.



தேர் கொட்டும் மழையிலும் வீதியுலா



தேர்திருவிழாவில் திரண்டிருந்த பக்தர்கள்



வெள்ளத்தில் பெண்கள் அடியழித்தல்



பிள்ளைக்காவடி

படங்கள் : நேசன்

# துர்க்கை அம்மன் தேர்வடம் இழுக்கப்பட்ட வேளை பெருமழை

வலி.வடக்கு, செப்.5

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேர்திருவிழாவான நேற்று, ஆலயப் பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெருமழை பெய்தது.

முற்பகல் 10.15 மணியளவில் அம்மன் தேர்முட்டிக்கு வந்து சேர்ந்து தேரில் ஏறும் வேளையில், திடீரென மழை தூறத்தொடங்கியது. அடியார்கள் வடம் பிடித்து தேரை இழுத்த போது மழை சோவெனக்கொட்டியது. ஆலய வீதிகளில் அரை அடி அளவுக்கு வெள்ளம் நின்றது.

பக்தர்கள் வெள்ளத்திற்குள்ளேயே கற்பூரச்சட்டி ஏந்துதல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடிஅழித்தல் ஆகிய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

ஊரடங்கு நேற்றுகாலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை நீக்கப்பட்டிருந்ததால் துர்க்கை அம்மனை தரிசிக்க, ஆயிரக் கணக்கான - எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான - அடியார்கள் தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்தனர்.

வலிகாமத்தின் பல பகுதிகளிலிருந்தும், வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்போரும் தேர்த் திருவிழாவுக்கு வந்தனர்.

அதிக எண்ணிக்கையான அடியார்கள் பறவைக்காவடி மற்றும் பிள்ளைக் காவடிகள் எடுத்து வந்து தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

இந்த வருடத்தில் நீண்ட காலமாக, - பல மாதங்களாக- தெல்லிப்பழை பகுதியில் மழை பெய்யவில்லை. துர்க்கை அம்மன்ஆலய தேர்த்திருவிழாவன்று பெருமழை பெய்தமை அடியார்கள் அன்னையின் அருள் என்று மகிழ்வுடன் தம்மிடையே பேசிக்கொண்டனர். (அ-86)

# பௌர்ணமி தின திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்,செப்.5

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 7 மணிமுதல் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ சுவாமிகளின் அருளாசியோடு மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்ப நாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். தினமும் ஆதீனத்தில் நடைபெற்று வரும் ஐந்தாந்திருமுறை முற்றோதல், மழை வேண்டி பதிகப்பாராயணமும் தொடர்ந்து நடைபெறும் என்றும்- மழை வேண்டல் பதிகத்தைப் படித்துப் பயன்பெற வேண்டுவோர் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தில் அதனைப் பெற்று பாராயணம் செய்யலாம் என்று மன்றத்தின் அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

# மட்டு. பேய்த்தாழையில் ஒரே இரவில் 3 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொலை

ஏறாவூர், செப் 5

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பேய்த்தாழை கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பட்டியடிச்சேனையைச் சேர்ந்த சலூன் உரிமையாளரான தியாகராஜா செந்தூரன் (வயது-22) என்பவர் ஞாயிறன்று இரவு 7 மணியளவில் பாடசாலை வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகள், இவரை வீட்டிலிருந்து கூட்டிச் சென்று வீதியில் வைத்துச் சுட்டுக் கொன்றனர் என்று கூறப்பட்டது. அதன்போது இவரது கர்ப்பிணி மனைவியும் ஆயுததாரிகளால் தாக்கப்பட்டார்.

கருங்காலிச்சோலை, நாகதம்பிரான் கோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நாகேந்திரன் சண்முகநாதன் (வயது-26) என்பவரும் அவரது வீட்டிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அன்றிரவு இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பேய்த்தாழை என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கந்தையா கருணாகரன் (வயது-23) என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இம்மூவரில் கந்தையா கருணாகரனின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும், ஏனைய இருவரதும் சடலங்கள் வாழைச்சேனை அரசினர் மருத்துவமனையிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கொலைச் சம்பவங்களால் குறித்த பிரதேசங்களில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

அரச படைகளுடன் சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவினரே இக்கொலைகளைப் புரிந்தனர் என்று அப்பகுதி மக்களை மேற்கோள் காட்டி 'தமிழ் நெற்' இணயத்தளம் நேற்று செய்தி வெளியிட்டது.

(த-157-03)

# மதவாச்சியில் கிளைமோர் பொலிஸ் பஸ் அருந்தப்பு!

கொழும்பு, செப் 5

அனுராதபுரம், மதவாச்சி - இக்கிரிக்கொல்லாவப் பிரதேசத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் பொலிஸார் பயணம் செய்த பஸ் ஒன்றை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியாவில் இருந்து கந்தளாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலிஸ் பஸ்ஸை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. எனினும், இந்தத் தாக்குதலில் சிக்காமல் குறித்த வாகனம் மயிரிழையில் தப்பிக்கொண்டது. இதனால், பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

(த-04)

# ஏழாலை ஆலயங்களில் ஊரடங்கு வேளை திருட்டு

யாழ்ப்பாணம், செப்.05

ஏழாலை பகுதியில் உள்ள ஐந்து ஆலயங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் மேற்படி ஆலயங்களில் இருந்து குறிப்பிட்ட பொருள்கள் திருட்டுப் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏழாலை முருகன், பிள்ளையார் அம்மன், பெரியதம்பிரான் மற்றும் வைரவர் ஆலயங்களில் இந்தத் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

ஆலயங்களில் இருந்து பொட்டுத்தாலி, உருநாடு, சாத்துப்படிகள், ஒலிபெருக்கி சாதனங்கள், மோட்டர்கள் மற்றும் மடப்பள்ளி பாத்திரங்கள் எனப் பல பொருள்களும் திருட்டுப் போயுள்ளன.

ஆலயங்களின் மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்த திருடர்கள் மூலவிக்கிரகத்தை பிரட்டி அதற்குள்ளிருந்த தகடுகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக, அப்பகுதி கிராம அலுவலரிடம் ஆலயப் பரிபாலன சபையினர் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

(68)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழுக்களின் பிரதித் தலைவராக ஜே.வி.பியின் சந்திரசேகரன்?

கொழும்பு, செப்.5

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு ஜே.வி.பியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரனை ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுத் தெரிவு செய்தது.

குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு பெரும்பாலும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனே நியமிக்கப்படுவார் என்பது உறுதியாகி இருந்தபோதிலும் கடைசி நேரத்தில்அந்த வாய்ப்பு அவருக்குக் கிடைக்காமல் கைநழுவிப்போனது என்று தெரியவருகிறது.

நேற்றுக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு, மகேஸ்வரனைக் குழுக்களின் பிரதித் தலைவராக நியமிக்கும் முடிவையோ - விருப்பத்தையோ - வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி மகேஸ்வரனுக்கு கிடைக்காமற்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்குப் போட்டியிட மகேஸ்வரன் விருப்பம் தெரிவித்ததை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி எற்கனவே அவருக்கு தனது ஆதரவைத்தெரிவித்திருந்தது. ஆனால், நேற்றுக் கடைசி நேரத்தில் அதுதொடர்பான தீர்மானம் எதனையும் எடுக்காமல் கட்சியினர் அவரைக் காலை வாரிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அலரி மாளிகையில் நேற்றுமாலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

குழுக்களின் பிரதித் தலைவராக மகேஸ்வரனை ஐ.தே.கட்சி தெரிவு செய்யாததை அடுத்து ஆளுங்கட்சி அடுத்த ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கில் அதுபற்றி விவா தித்தபோது இராமலிங்கம் சந்திரசேகரனின் பெயரை ஜனாதிபதி முன்மொழிந்தார் என்று தெரியவருகிறது.

இதனால் ஆளுங்கட்சியினால் தீர்மானிக்கப்பட்ட ஜே.வி.பி. எம்.பியான இராமலிங்கம் சந்திரசேகரன் போட்டியின்றி இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற வாய்ப்புக் கிட்டியுள்ளது என்று ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். ஆயர் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 5

அல்லைப்பிட்டி பங்குத்தந்தை மற்றும் அவரது உதவியாளர் காணாமற்போன விவகாரம் குறித்து விரைவில் பதில் தருமாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பங்குத்தந்தையும் அவரது உதவியாளரும் காணாமற்போய் 15 நாள்கள் கடந்தும் அவர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காமை தமக்கு கவலையளிப்பதாக ஆயர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

## குண்டுப் புரளியால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டிருந்த விமானம், நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா. சார் அமைப்புக்களின் பிரதி நிதிகளுக்கான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ரத்மலானையிலிருந்து பலாலி நோக்கி புறப்படத் த[illegible]ராக இருந்தது.

இந்த வேளையில்- குறிப்பிட்ட விமானத்தில் குண்டு இருப்பதாக அநாமேதய தகவல் ஒன்று கிடைத்தது. இதனை அடுத்து விமானத்தில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. ரத்மலானை விமான நிலையத்திலும் இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் விமானத்திலிருந்து குண்டு எதுவும் மீட்கப்படவில்லை. குண்டுப் புரளியால் விமானம் பலாலி நோக்கிப் புறப்படுவது சுமார் ஒன்றரை மணிநேரம் தாமதமாகியது.

விமானத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையை அடுத்து பலாலி வந்த குறிப்பிட விமானத்தில் குடாநாட்டில் தங்கியிருந்த ஐ.நா.சார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களில் ஒரு தொகுதியினர் கொழும்பு திரும்பினர்.

இதே வேளை, யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள ஐ.நா.சார்ந்த அமைப்புக்களின் மற்றொரு தொகுதி பிரதிநிதிகளை அழைத்துச்செல்ல மற்றொரு விமான சேவைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. (1)

## புனர்வாழ்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததே. எனினும், இவ்வாறு வங்கிக் கணக்குகளை முடக்கிவைப்பதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் உள்ள போதிலும் ஒருவார காலத்துக்கும் கூடிய காலப்பகுதிக்கு அவ்வாறு கணக்குகளை முடக்கி வைப்பதற்கு சட்ட ரீதியாக இடமில்லை என்று தெரிவிக் கப்படுகிறது. அவ்வாறு ஒருவார காலப்பகுதிக்கு மேலாக கணக்கை முடக்கி வைத்திருக்க வேண்டி ஏற்பட்டால் அதற்கு நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறவேண்டும்.

இந்தச் சட்ட ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டே சட்டமா அதிபர் ஊடாக மேல் நீதிமன்றத்திடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. (ஐ)

## ஆறுநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அரச அதிபரால் வழங்கப்பட்ட மாவின் மூலம் தற்சமயம் பாண் உற்பத்தி இடம்பெறுவதாகவும் -

ஒரு இறாத்தல் பாணின் விலை ரூபா 28 இற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் -

விலையில் வேறுஎவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் - சங்க நிர்வாகிகள் மேலும் தெரிவித்தனர்.

(1-111)

## புலிப் பயங்கரவாதத்திற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், மும்மதத் தலைவர்கள், கட்சி உறுப்பினர்களென சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட நேற்றைய மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைதிப் பேச்சுக்கள் குறித்துப் பெரிதாக எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை.

கட்சியின் கடந்த கால வரலாறு, கட்சி எதிர்நோக்கிய நெருக்கடிகள் பற்றித் தனது உரையில் விளக்கமளித்த ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது:-

"நாடு பல்வேறு சவால்களை எதிர்நோக்கியிருக்கும் ஒரு கால கட்டத்தில் நாம் கட்சியின் வருடாந்த சம்மேளனத்தைக் கொண்டாடுகின்றோம். புலிப் பயங்கரவாதிகள் தாய் நாட்டைப் பிரிப்பதற்குக் கொடூரமான முறையில் வன்முறைகளில் ஈடுபட்டு, மக்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதனால், நாட்டின் பொருளாதார நிலைக்கும் சவால் ஏற்பட்டுள்ளது.

அதேசமயம், பல தசாப்த காலம் ஒன்றாக இருந்து வரும் மூவின மக்களின் அந்நியோன்னியம் சிதைந்து விடாமல் அதனைக் கட்டியெழுப்ப வேண்டிய சவாலும் எம்முன் உள்ளது. இந்தச் சவால்களை நாம் நேசிக்கின்றோம். வடக்கு - கிழக்குப் பயங்கரவாதத்திற்கு அரசு தலை சாய்க்கவில்லை என்பதையும், அதற்கு முகம் கொடுக்கக் கூடிய துணிச்சல் எம்மிடம் உள்ளதென்பதையும் நாம் நிரூபித்துள்ளோம். இப்போது கூட மக்களின் நன்மை கருதி நாம் சம்பூரைக் கைப்பற்றிவிட்டோம் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது நடைபெறுவதை யுத்தமென்று யாரும் எண்ண வேண்டாம். தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கிறோம். அவ்வளவுதான். சமாதானத்தை விரும்பும் மக்கள், யுத்தத்தை எதிர்க்கும் மக்கள் அதற்கான சூழலை உருவாக்கிவிட வேண்டும்.

நான் படைத் தளபதி ஒருவரை நியமிக்க முற்பட்டபோது சிலர் அவரது மதம் பற்றியும், அவரின் பின்னணி குறித்தும் கூறினார்கள். சிலர் எனக்குச் சில ஆதாரங்களையும் முன்வைத்தனர். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் நான் இதுபற்றி வினவியபோது, சம்பந்தப்பட்ட படைத் தளபதி திறமை மிக்கவர், இந்தப் பதவிக்குத் தகுதியானவர் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்படித் திற மைக்கு வாய்ப்பளித்த காரணத்தினால் இன்று போர் முனையில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கு இருந்தபோதே சரத் பொன்சேகா தளபதியாக நியமிக்கப்பட்டார். இதுதான் எமது வெற்றியின் இரகசியம். நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் திறமைக்கு மதிப்பளிக்க வேண்டும். கட்சிக்குள்ளும் இதுதான் வேண்டும்.

பயங்கரவாதிகளுக்கு அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பதிலளித்து, சாதாரண மக்களுக்கு அவர்களுக்கு வேண்டியவற்றை நாம் செய்து கொடுக்க வேண்டும். தமிழர்கள் அனைவரும் புலிகள் அல்லர். தமிழர்கள் அனைவரையும் புலிகளாக நினைக்கும் ஒரு வியாதி எம்மத்தியில் உள்ளது. தமிழர்களைப் புலி என்று பார்ப்பது முழுத் தவறு. பயங்கரவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த லக்ஷ்மன் கதிர்காமர், ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தமிழர் இல்லையா? முப்படைகளிலும் உயர் பதவிகளை வகித்து வரும் தமிழர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வில்லையா? இலங்கை விமானப்படையின் 2 மற்றும் 3 ஆம் தரங்களில் தமிழர்கள் இருக்கின்றனர். அவர்கள் தமது நாட்டுக்கான கடமையைச் செய்யவில்லையா? எனவே, இந்த வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்."- இவ்வாறு மேலும் கூறினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (ஐ)

## சம்பூரைக் கைப்பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பூரில் நடந்தது யுத்தம் அல்ல என்றும், புலிகளின் தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல்களே நடத்தப்பட்டன எனவும் அமைச்சர் ரம்புக்வெல கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று மாலை அறிக்கையொன்றை விடுத்த தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் சம்பூர்ப் பிரதேசம் அரச படைகளின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

### புலிகள் சீற்றம்

சம்பூர் பகுதியை அரசுப் படைகள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

இது ஒரு போர்ப் பிரகடன நடவடிக்கை. அபாண்டமான யுத்த நிறுத்த மீறல். இது பற்றி கண்காணிப்புக் குழு மௌனம்காப்பது ஏன்?' என்று புலிகள் தரப்பில் இருந்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

"சம்பூரில் ஏற்பட்டிருப்பது மூலோபாய ரீதியில் புலிகளுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பைத் தரக்கூடியது அல்ல" - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் தெரிவித்தார்.

"கடந்த 28 ஆம் திகதி சம்பூரை நோக்கிய நகர்வை ஆரம்பித்த இலங்கை அரசுப் படைகள் தற்போது சம்பூர் வரை முன்னேறி வந்திருக்கின்றன.

"சம்பூரில் தொடர்ந்தும் மோதல் இடம் பெற்றுவருகின்றது. எமது படைகள் தந்திரோபாய ரீதியான தாக்குதல்களை நடத்தி எதிரிக்கு இழப்புகளைக் கொடுத்தவண்ணம் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

"சம்பூர் நகருக்கு அண்மையிலேயே மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன.

"ஒரு பாரிய யுத்த சூழ்நிலையில் இருக்கும்போது சிறுசிறு அல்லது ஓரிரு சமர்கள், பரிமாணங்கள் என்பன ஒரு பின்னடைவுத் தோற் றப்பாட்டை ஏற்படுத்தினாலும் கூட எமது மூலோபாயத்திற்கு இந்த சம்பூர் நடவடிக்கையால் எந்தவித சேதமுமில்லை.

"அத்துடன், இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவது யுத்தநிறுத்தம் என்று உலகத்திற்கு அறிவித்துக்கொண்டிருக்கும் அரசுக்குத்தான் பாதிப்பானது. அத்தகைய ஒரு நடவடிக்கையையே அரசு செய்துள்ளது.

ஆகவே, இதனை நாம் ஓர் அரசியல் இராணுவ சமநிலையில் நின்றுதான் பார்க்க வேண்டும்" - என்று இளந்திரையன் தெரிவித்தார்.

### எழிலனின் முறைப்பாடு

சம்பூர் நிலைவரம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கண்காணிப்புக் குழுவுக்குச் செய்த முறைப்பாட்டில் கூறி இருப்பதாவது:-

போர்நிறுத்தம் பற்றிய எந்த அக்கறையும் இன்றி அதனைப் புறக்கணித்த சிறிலங்கா அரசு, போர்ப் பிரகடனமாகச் சம்பூரை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையைக் கடந்த மாதம் 28ஆம் திகதி தொடங்கியது.

சம்பூரைச் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்த நிலையில் அரசுத் தரப்பு மகிழ்ச்சியாக இதனைக் கொண்டாட உள்ளதாக அறிவிக்கிறது.

அப்பாவித் தமிழ் மக்கள் 97 பேரை கொன்றொழித்து -

215 பேரைக் காயப்படுத்தி -

மக்களின் சொத்துக்களை அழித்து -

46 ஆயிரம் மக்களை இடம்பெயர்த்து விட்டு -

சம்பூரைத் தரைமட்டமாக்கி விட்டு -

அதனை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம் என்று சிறிலங்கா அரசுத் தரப்பு அறிவிக்கின்றது.

ஆனால், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அமைதியாக இருப்பது ஏன்?

சிங்கள மக்கள் யாரும் கொல்லப்பட்டால் ஆதாரம் ஏதுமின்றி தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பழிபோட்டுக்குரல் எழுப்புகின்றவர்கள் - தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு, அவர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டு, நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, அதனை அதிகாரபூர்வமாக அறிவித்த போதும் அமைதி காப்பது ஏன்? - என்று அந்த முறைப்பாட்டில் சி. எழிலன் கேள்வி எழுப்பியுள்ளார்.

புலித்தேவன் கருத்து

இது தொடர்பாக றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ. புலித்தேவன் தொலைபேசியூடாகக்கருத்து வெளியிட்டபோது கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியை இராணுவம் ஆக்கிரமிப்பது என்பது பாரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் மதிக்கவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. நாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளோம். - என்று தெரிவித்தார்.

இருப்பினும் சிறிலங்கா இராணுவத்தினருக்குப் பதிலடியாக தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த இடத்திலும் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அரசியல் நோக்கர்கள் அச்சம் தெரிவிப்பதாக றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ - 12)

## அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் வட்டாரத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு பக்கத்திலிருந்து மூன்று சடலங்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டார்.

"மீட்கப்பட்ட சடலங்களில் ஷெல் சிதறல் காயங்கள் காணப்படுகின்றன. மூன்று வாரங்களுக்கு முன்னர் பிரஸ்தாப நபர்கள் உயிரிழந்திருக்கக் கூடும்.

"மீட்கப்பட்ட சடலங்களில் ஐவர் ஆண்கள். இருவர் பெண்கள்.

"மூன்று ஆண்களும் 35 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். இரண்டு ஆண்கள் 50 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். இரண்டு பெண்களும் 40 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்" -

இப்படி சட்ட வைத்திய அதிகாரி தமது பிரேத பரிசோதனையில் தெரிவித்தார்.

சடலங்களை படம் எடுத்தபின் அதே இடத்தில் புதைக்கும்படி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (1)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்க[illegible].

இதேவேளை - தற்டே[illegible]து விசேட அதிரடிப் படைப் பிரிவு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால் 5ஆயிரம் விசேட அதிரடிப் படையினருக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (க)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடி நிலைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசும், புலிகளும் உட னடி நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவது குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டி வருமென்று இணைத்தலைமை நாடுகள் எச்சரிக்கை விடுக்கவுள்ளன என்று கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை தொடருமானால் [illegible]தவி வழங்கும் விவகாரத்தில் கடுமையாக [illegible]ல நிபந்தனைகளை முன்வைப்பதற்கும் இணைத்தலைமை நாடுகள் உத்தேசித்திருக்கின்றன எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை,இணைத் தலைமை நாடுகளின் அழுத் தத்தைத் தவிர்க்கும் வகையில் சில இராஜ தந்திர நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூதூரில் சர்வதேச தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பிலும் இணைத்தலைமை நாடுகள் கடும் கண்டனத்தை வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டீசலின் விலை 3 ரூபாவாலும், மண்ணெண்ணெய்யின் விலை 2 ரூபா 50 சதத்தாலும் அதிகரிக்கப்படுகிறது. இந்த விலை அதிகரிப்பின்படி ஒரு லீற் றர் பெற்றோல் 101 ரூபாவாகவும் -ஒரு லீற்றர் டீசல் 67 ரூபாவாகவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 48 ரூபாவாகவும் விற்கப்படும். (ஐ-12)

SCIENCE COLLEGE
JAFFNA
2007/2008
DAY CLASS
CHE: BY. MAHESWARAN
WED 06.09.2006 முதல் வழமையான
நேர அட்டவணைப்படி நடைபெறும்

INTER NET
அழைப்புக்கள்
ஊரடங்கு தளர்த்தப்பட்ட
நேரங்களில் குறைந்த
கட்டணத்தில் வெளிநாட்டு
அழைப்புக்களுக்கு
திருமுருகன் கொம் நெற்
259, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7835
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி. T.P.: 021 222 7310

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org